தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சொத்துவரி – நகராட்சிகள் மற்றும் நகராட்சி நகரியங்களில் சொத்துவரித் திருத்தம் – சீராய்வு மனுக்கள் – முடிவு செய்தல் – பின்பற்றத்தக்க வழிமுறைகள் பற்றி – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அரசு ஆணை எண் 1137 நாள்: 27,11.87

படிக்கப்பட்டது:

அரசு ஆணை (நிலை) எண் 1136, நநிஉ.க்குவ துறை,,
நாள்: 27.11.87.

. . . . .

ஆணை:

1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில்
காவது அட்டவணைக் கீழ் உள்ள விதி 8–ன்படி நகராட்சிகளில் ஐந்து
டுகளுக்கு ஒரு முறை சொத்துவரித் திருத்தம் செய்ய வேண்டும்.
ராட்சிகளில் கடந்த சுமார் 15 ஆண்டுகளாக சொத்துவரிப் பொது
ாய்வு செய்யப்படவில்லை. இதற்கான முக்கிய காரணம் நகராட்சிகளில்
ர்ந்து எடுக்கப்பட்ட மன்றங்கள் செயல்படாததே. 1987ம் ஆண்டு
ரவரி மாதத்தில் நகராட்சி தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட
ுப்பினர்கள் பதவியேற்றனர். எனவே நகராட்சிகளில் பொது வரித்
த்தத்திற்கு சிறப்பு அலுவலர்களை நியமித்து சொத்துவரி திருத்தப்
ியினை தொடங்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. இவ்வலுவலர்கள்
கொண்ட சொத்துவரித் திருத்தம் மிக அதிகமாக இருப்பதாக மக்களிடமிருந்து
ார்கள் வரவே அரசு, சிறப்பு சீராய்வு அலுவலர்கள் மேற்கூறிய பணியினைத்
டரவேண்டாம் என்றும், 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட
ராட்சிகள் சட்ட விதிகளின்படி செயல்படுமாறும் நகராட்சி மற்றும்
ரிய நிர்வாக அதிகாரிகளுக்கு ஆணையிட்டது. அதன் அடிப்படையிலும்
80–ம் ஆண்டு நகராட்சி நடைமுறை நூல் பாகம் 1–ல் ஏற்படுத்தப்பட்ட
4–ஏ என்ற எண் கொண்ட திருத்தத்தின் அடிப்படையிலும், நகராட்சி
யர்களுக்கும் மற்றும் நகராட்சி நகரிய நிர்வாக அலுவலர்களும்
து வரித் திருத்தத்தை செய்துவிட்டு, அத்திருத்தம் 1.10.87 முதல்
லுக்கு வரும் என உரிய அறிவிப்பு கொடுத்துள்ளனர். இந்த சொத்துவரித்
த்த மதிப்பீடும் பல மடங்கு அதிகமாக உள்ளது என முறையீடுகள் அரசுக்கு
ள்ளன. இது குறித்து அரசு கவனமாக பரிசீலனை செய்து மேலே
ப்பிட்ட நகராட்சி நடைமுறை நூல் பாகம் 1–ல் உள்ள விதிக்கூறு எண் 324–ஏ
க்கம் செய்ய முடிவு செய்து, அதன்படி அரசு ஆணை நிலை எண். 1136
க்குவ., நாள் 27. 1.87–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. வரி செலுத்துவோரின் வரிச்சுமையை அளவுக்கு குறைக்க வழிசெய்யும்
யில் நகராட்சி ஆணையர்கள் மற்றும் நகராட்சி நகரிய நிர்வாக
லர்கள் சொத்துவரித் திருத்த சீராய்வு மனுக்களை முடிவு செய்யும்பொழுது
க்கண்ட வழிமுறைகளை கடைப்பிடிக்க அறிவுரை வழங்கப்படுகிறது.

(அ) சொந்த குடியிருப்பு வீடு மற்றும் ஒரு பகுதி குடியிருப்பு மற்ற பகுதி வாடகைக்கு விடப்பட்டுள்ள வீடுகளுக்கு 1.10 .87 தேதிக்கு முன்பு இருந்த வரியை விட கூடுதலாக, ஒரு மடங்குக்குக் குறையாமல் வரி நிர்ணயிக்க வேண்டும். (உதாரணம்: 1.10.87க்கு முன் ரூ. 100 ஆக இருந்த வரியை இந்த முறைப்படி அதிகபட்சம் ரூ. 200க்கு மேற்படாமல் நிர்ணயிக்க வேண்டும்) சுருங்கக்கூறின், 1.10.87க்கு முன்பு ரூ. 100 ஆக இருந்தவரி தற்பொழுது விதித்துள்ள முறைப்படி ரூ. 200 ஆக மாறும். இதில் குறைக்கவோ அதிகப்படுத்தவோ கூடாது.

முழுமையாக வாடகைக்கு விடப்பட்ட வீடுகளுக்கு 1,10,87 தேதிக்கு முன்பிருந்த வரியைவிட கூடுதலாக அதிக பட்சம் இரண்டு மடங்குக்குக் குறையாமல் வரி நிர்ணயிக்க வேண்டும். (உதாரணம்: 1,10,87க்கு முன்பு இருந்த ரூ. 100 /– ஆக இருந்த ... அதிக பட்சம் ரூ. 300/– ஆக நிர்ணயிக்க வேண்டும்) ...ன் 1.10.87க்கு முன்பு ரூ. 100 ஆக இருந்த ... விதித்துள்ள முறைப்படி ரூ. 300 ஆக மாறும். இதில் குறைக்கவோ அதிகப்படுத்தவோ கூடாது.

(இ) வணிகம், தொழிற்சாலை, திரையரங்குகள், தங்கும் விடுதிகள், மருத்துவ மனைகள் மற்றும் தொழிற்கூடங்களாகப் பயன்படுத்தப்படும் குடியிருப்பு அல்லாத மற்ற கட்டிடங்களுக்கு அதிக பட்சம் மூன்று மடங்குகளுக்குக் குறையாமல் நிர்ணயிக்க வேண்டும். (உதாரணம்: 1.10.87க்கு முன்பு ரூ. 100 ஆக இருந்த வரியை அதிக பட்சம் ரூ. 400க்கு மேற்படாமல் நிர்ணயிக்க வேண்டும்)

(ஈ) ஏப்ரல் 1, 1982க்குப் பிறகு கட்டிய குடியிருப்பு மற்றும் [illegible] கட்டிடங்களுக்கும் 1.10.87 - தேதிக்கு முன்பு இருந்த வரியை விட 50% வரை கூடுதலாக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டும். (உதாரணம் 1.10.87க்கு முன் ரூ. 100 ஆக இருந்த வரியை அதிக பட்சம் ரூ. 150க்கு மேற்படாமல் உயர்த்தி நிர்ணயிக்க வேண்டும்)

(உ) குடிசை வீடுகளுக்கு குறைந்த அளவு வரி விதித்திருந்தால் அதை உயர்த்தத் தேவையில்லை.

3. இந்த அறிவுரைகள் 1.10.87 முதல் அமுலுக்கு வரும் பொது வரித் திருத்தத்தினால் பெறப்பட்ட சீராய்வு மனுக்கள் முடிவு செய்வதற்கு மட்டுமே பொருந்தும். இது தவிர நகராட்சி ஆணையர்கள் தேவையென்று கருதினால் தாங்களாகவே மேற்கூறிய அறிவுரைகள் அடிப்படையிலும், மேற்கூறிய சட்ட விதிகளின் அடிப்படையிலும் பொது வரித் திருத்தங்களை சீராய்வு மேற்கொள்ளலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. ஆ. சீதாராம தாஸ்,
சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர்

/உண்மை நகல்/

தலை மேலாளர் (வரிகள்)

வி.4.4.